| சாட்சி : DW1<br>அப்துல் சலாம் | அ.வ.எண். 117/2016 | 30.01.2025 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

முருகபிள்ளைக்கு இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சர்வேயரை வைத்து வழக்கு சொத்தை அளந்ததற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கு எந்த ஆவணமும் எழுதி கொடுத்துள்ளரா என்றால் வாதி எனக்கு சம்மத பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி சம்மத பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் சம்மத பத்திரம் உட்பட எந்த ஆவணத்தையும் வாதி எனக்கு எழுதிதரவில்லை என்றும், வழக்கிற்காக எழுதி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அதனால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பத்மா, பவித்ரா ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுப்பதாக நான் ஒப்பந்தம் போட்டுள்ளேன். அதில் வில்லங்கபதிவில் சமீபத்திய பதிவு எதுவும் காட்ட வேண்டும் என்று அவர்கள் சொன்னதின் பேரில் நான் எனது மகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தான் எனது மகளுக்கு விருப்பத்தின் பேரில் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து, பின்னிட்டு நான் அதனை ரத்து செய்துவிட்டேன். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 22 ல் ஜெயகுமார் அறிவுரையின்படி எனது மகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதிகள் தவறு தான் என்றால் சரிதான்.

எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 22 ல் பவித்ரா, பத்மா ஆகியோர் வழக்கு சொத்தை மனைகளாக விற்பனை செய்த பிறகு தான் கிரைய தொகை கொடுப்பதாகவும், அதனால் நான் அவர்களுக்கு ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ரத்து செய்வதாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் சரிதான். சர்வே எண்.59/10 உட்பிரிவு செய்யப்பட்டு வாதியின் அப்பா பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டது. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 17 ல் முருகபிள்ளைக்கு 3.6 சென்ட் நிலம் பாத்தியப்பட்டது போல் சர்வே எண்.59/10 உட்பிரிவு ஏற்படுத்தியிருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 17 ல் எனக்கு அறிவிப்பு கொடுக்காமல் முருகபிள்ளை, ஜெயராமன், தைலம்மை ஆகியோருக்கு உட்பிரிவு செய்திருப்பதாக சொல்லியுள்ளது சரியா, தவறா என்றால் அவ்வாறு சொல்லியிருப்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. நான் 4 ஏக்கர் 6 சென்ட் பத்திரம் உள்ளதகா கட்சி செய்த நிலையில், 4.32 சென்டிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் கம்மி, ஜாஸ்தி அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது. பி.வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தில் முருகபிள்ளைக்கு பூர்வீக சொத்து என்று தான் கண்டுள்ளது என்றால் அந்த சமயத்தில் எனக்கு எதுவும் தெரியாது. இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி கிடைத்ததாக என்னை ஏமாற்றி முருகபிள்ளை விற்பனை செய்துவிட்டார். முருகபிள்ளை வழக்கு சொத்தை குத்தகை சாகுபடி செய்து வந்ததற்கான ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை. முருகபிள்ளையின் அப்பா பெயர் ஞாபகம் இல்லை.

எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 11ல் சொல்லியுள்ள சொத்துக்கள் சாகிப் சுதாரி என்பவரின் பெயரில் இருந்ததற்கான ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முருகபிள்ளை அவரது தாத்தா காலத்திலிருந்தே அனுபவம் செய்து வந்தார் என்றும், அதனால் தான் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் முருகபிள்ளைக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்தவிதமான ஆவணத்தையும் பார்க்காமலும், எந்தவித விவரத்தையும் தெரியாமலும் வழக்கு சொத்தை பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நாளது தேதிவரை வாதி மற்றும் அவரது குடும்பத்தாரின் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. நான் தான் அனுபவத்தில் இருந்து வருகிறேன். அதற்கான ஆவணங்கள் உள்ளது. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முருகபிள்ளையின் பூர்வீக சொத்து என்பதால் முருகபிள்ளை தனிப்பட்ட முறையில் ஆவணம் எழுதி கொடுக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வாதியும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து நான் அனுபவத்தில் இருப்பதாகவும் எனக்கு உரிமை இருப்பதாகவும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வழக்கு சொத்து அனுபவத்தில் உள்ளது என்பதாலும், வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதாலும், வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.